# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1985 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பல்கலைக்கழக மகளிர் இலங்கை சம்மேளன (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1985, ஏப்றில் மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1985, ஏப்பிறல் மாதம் 11 ஆந் தேதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 90* — *தபாற் செலவு : சதம் 60*

**1985 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பல்கலைக்கழக மகளிர் இலங்கை சம்மேளன (கூட்டிணைத்தல்) சட்டம்**

[1985, ஏப்பிரல் மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 2/84 1630

**பல்கலைக்கழக மகளிர் இலங்கை சம்மேளனத்தைக் கூட்டிணைப்பதற்கான ஒரு சட்டம்.**

முன்னுரை.

"பல்கலைக்கழக மகளிர் இலங்கை சம்மேளனம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதும் ஆன ஓர் கழகம், அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்பு பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுறக் கொண்டு நடாத்தும் அத்துடன் நிறைவேற்றும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரையில் வெற்றிகரமாகக் கொண்டு நடாத்தியும் நிறைவேற்றியும் வந்துள்ளதாதலாலும் அது கூட்டிணைக்கவேண்டி விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1985 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பல்கலைக்கழக மகளிர் இலங்கை சம்மேளன (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பல்கலைக்கழக மகளிர் இலங்கை சம்மேளனத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அதன் பின்னரும் இதனகத்துப் பின்னர் "சம்மேளனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் பல்கலைக்கழக மகளிர் இலங்கை சம்மேளனத்தின் உறுப்பினர்களாகத் தற்போதுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "பல்கலைக்கழக மகளிர் இலங்கை சம்மேளனம்" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறுவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாதல் வேண்டும்; (இது இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எல்லா நீதிமன்றங்களிலும் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடருதலும் வேண்டும் என்பதுடன் வழக்குத் தொடரலாம்; அதற்கெதிராக வழக்குத் தொடரப்படுதல் வேண்டும் என்பதுடன் வழக்குத் தொடரவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும், திருத்தவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் அது கொண்டது.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படும் பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) இலங்கைப் பல்கலைக்கழக மகளிரைப் பிரதிநிதித்துவப்படுத்துதலும் அவர்களது நலனுடன் சம்பந்தப்பட்ட கருமங்களில் அவர்களது சார்பில் நடவடிக்கையெடுத்தலும் ;

2—ஏ 020828—2,790 (06/83)

(ஆ) இனத்தை, மதத்தை அல்லது அரசியல் அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாது பல்கலைக்கழக மகளிர் மத்தியில் ஒத்துழைப்பையும் சிநேகத்தையும் கருத்தொற்றுமையையும் மேம்படுத்துதல் ;

(இ) பல்கலைக்கழக மகளிரினால் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுதலை ஊக்குவித்தல் ;

(ஈ) கற்ற மகளிர் சமூகப்பொறுப்பில் அவர்களது தகுந்த பங்கை ஏற்பதற்கு அவர்களை ஊக்குவித்தல் ;

(உ) மகளிர் சம்பந்தப்பட்ட எவையேனும் உத்தேச சட்டவாக்க அல்லது வேறு நடவடிக்கைகளைப்பற்றி அது அறிந்து கொள்ளுதலும், பொதுவாக மகளிரினதும் குறிப்பாகப் பல்கலைக்கழக மகளிரினதும் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்தற்காகப் பிரதிநிதித்துவம் செய்தலும் வேறு தோதான நடபடிகளை எடுத்தலும் ;

(ஊ) சமூகசேவை ஆற்றுதலும் குறிப்பாக மகளிர், பிள்ளைகள் மத்தியிலும் பொதுவாக மற்றைய ஆட்கள் மத்தியிலும் ஏழ்மை, துன்பம் சுகவீனம் போசாக்கின்மை, படிப்பறிவின்மை அல்லது வேலையில்லாமையிலிருந்து நிவாரணத்துக்கான தரும, கல்வி சமூக நலன்புரி செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் ;

(எ) உள்ளூரினதாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டினதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி கூட்டுத்தாபனத்தினதும் இலக்குகளையும் குறிக்கோள்களையும் ஒத்தவையான இலக்குகளையும், குறிக்கோள்களையும் கொண்டதான வேறேதேனும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவுடன் விசேடத்துவ முகவராண்மை நிலையத்துடன் அல்லது கழகத்துடன் இணைத்தல், கூட்டுச்சேருதல், ஒன்றிணைத்தல் அல்லது ஒத்துழைத்தல், ஒப்பளித்தல் அல்லது அதன் உறுப்பினராக வருதல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாக அல்லது இடைநேர்விளைவாக அல்லது உகந்ததாகக்கூடியவையான அத்துடன் பொதுவாக அதன் உறுப்பினர்களின் நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் சேம நலனுக்கும் அவசியமாகக்கூடியவையான அத்தகைய வேறெல்லாக்காரியங்களைச் செய்தல்.

(2) இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி, “ ஒரு பல்கலைக்கழக மகளிர் ” என்பது, நிறைவேற்றுப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தினால் எம் மகளிருக்கு பட்டமொன்று அளிக்கப்பட்டுள்ளதோ அம் மகளிர் ஒருவர் எனப் பொருளாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பேரவை.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ளவையான விதிகளுக்கு அமைவாக, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறும், அவற்றுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களுமான அத்தகையினரான உறுப்பினர்களைக் கொண்டமைந்த கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பேரவையினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுப்பேரவை, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவி வகிப்பதான சம்மேளனத்தின் நிறைவேற்றுப் பேரவையாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் நடாத்தப்படும் கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் வரை அது பதவி வகித்தலும் வேண்டும்.

உறுப்பினர்களின் இடாப்பு.

5. (1) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பேரவை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியில் சம்மேளனத்தின் உறுப்பினரொருவரா யிருக்கும் ஒவ்வோர் ஆளும் அத்துடன் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினது உறுப்பினரொருவராக அதன் பின்னர் முறையாகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வோர் ஆளும் அவருடைய பெயரைப் பொறிப்பித்துக்கொள்ள வேண்டிய இடாப்பொன்றை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) இடாப்பானது பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஒவ்வோர் உறுப்பினரதும் பெயரும் முகவரியும்;

(ஆ) உறுப்பினரது கல்வித் தகைமைகளும், அவருக்கு அளிக்கப்பட்ட பட்டங்களும்;

(இ) எவரேனும் ஆளின் பெயர் இடாப்பில் உறுப்பினரொருவராகப் பொறிக்கப்பட்ட தேதி;

(ஈ) எவரேனும் ஆள் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்த தேதி.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) உறுப்பினர்களின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதோரின் வாக்குகளைக் கொண்டும் உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல், அவர்கள் பதவி விலகல், ஓய்வுபெறுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பேரவையினதும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களினதும், முகவர்களினதும், சேவையாளர்களினதும் கடமைகளை நடாத்துதற்காகவும், அலுவல்களைக் கையாளுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும் அத்துடன் வேறுவகையில் பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைக்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதவையாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்படும்போது, அதேபோன்ற ஒரு கூட்டத்திலும், அதேமுறையிலும் மாற்றப்படலாம், அவற்றுக்குச் சேர்க்கப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொவ்வொருவரும், அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

7. கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பேரவையானது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்டவையும் செலவுசெய்யப்பட்டவையுமான எல்லாப் பணத்தொகைகள் பற்றி முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோர் ஆண்டும் ஒருதடவையாவது பரிசோதிக்கப்படவும் கணக்காய்வு செய்யப்படவும் வேண்டும்; அத்துடன் வருமான, செலவினக் கணக்கினதும், ஐந்தொகையினதும் செம்மை உரியமுறையில் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் அல்லது கணக்காய்வாளர்களினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

*சம்மேளனத்திடமிருந்து போமதியானவையும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவையும் ஆன தனிசுகள்.*

8. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று உள்ளவையான சம்மேளனத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், சம்மேளனத்துக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும், அதற்குச் செலுத்தற்படற்பாலனவையான ஒப்பப் பணங்களும் உதவுதொகைகளும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) சம்மேளனத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்தங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பணங்களையும் ஆதனங்களையும் பயன்படுத்தல்.*

9. எங்கிருந்து வந்துறப்பெறினும் கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனங்களும் இதனகத்து எடுத்துரைக்கப்பட்டவையான அதனது குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டும் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதனது எப்பாகமாவது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குப் பங்கிலாபமெனும் வகையாகவோ மிகையூதியமெனும் வகையாகவோ அல்லது வேறு விதமாகவோ எவ்வாறாகவும் இலாபமெனும் வகையாகவோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ செலுத்தப்படுதலோ கைமாற்றப்படுதலோ ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள் :—

(அ) கூட்டுத்தாபனத்துக்கு எவையேனும் சேவைகளை ஆற்றியதற்காக கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினருக்கு நல்லெண்ணத்துடனான நியாயமானதும் தகுந்ததுமான ஊதியக் கொடுப்பனவை ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால் அல்லது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவர் எக்கம்பெனியில் பங்குதாரொருவராகவிருக்கின்றாரோ அக்கம்பெனியால் கூட்டுத்தாபனத்துக்கு வாடகைக்கு விடப்பட்ட வளவுகளுக்கான நியாயமானதும் தகுந்ததுமான வாடகைக் கொடுப்பனவை ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினராரு, அலுவலரது அல்லது ஊழியரது பணிகளை அல்லது கடமைகளைப் புரிவதில் அல்லது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதில் நிறைவேற்றுச் சபையின் முன்னங்கீகாரத்துடன் அவரால் உறப்பட்ட நியாயமானதும் தகுந்ததுமான செலவுகளின் மீளளிப்பை அல்லது மீள்கொடுப்பனவை,

தடுப்பதாதலாகாது.

10. கூட்டுத்தாபனம், அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது குத்தகைச் சாதனத்தின்மீது அல்லது அதன்பயனுக அல்லது ஏதேனும் மரணசாதனக் கையளிப்புமீது அல்லது அதன்பயனுக அல்லது வேறு வகையில் ஒன்றில் பயன்பெறு சொந்தக்காரராக அல்லது நம்பிக் கைப் பொறுப்பாளராக அல்லது வேறுவகையில் கொள்ளுவதற்கும் வைத் திருப்பதற்கும் சட்டத்தில் இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், இச்சட்டத் தின் நோக்கங்களுக்காகவும், அப்போதைக்கான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாகவும் அல்லது (நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின், அத்துடன் இயைபான கையளிப்புச் சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு எப்போதும் அமைவாக) விற்பனை செய்வதற்கு, ஈடுவைப்பதற்கு, குத்தகை கொடுப்பதற்கு, கொடுத்து மாற்றுவதற்கு அல்லது வேறுவிதமாக கையுதிர்ப்பதற்கு அவற்றைப் பிணிப்பதற்கு அல்லது பொறுப்பாக்குதற்கு ஆன முழுத் தத்துவத்துடன் இயைபான கையளிப்புச் சாதனத்தில் அடங்கியுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் நம்பிக்கைப்பொறுப்புகளின்மீதும் அவற்றின் நோக்கங்களுக்காகவும் கூட் டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

ஆதனத்தை வைத்திருப்பதற் கான கூட்டுத் தாபனத்தின் தத்துவம்.

11. கூட்டுத்தாபனத்துக்கு,

(அ) அதன் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவையும் அந் நோக்கங்களுக்காகச் சட்டமுறையாகக் கொள்ளவும்படக்கூடிய வையுமான காணிகளை அல்லது கட்டடங்களைக் கொள்வனவுசெய் தலும் கொள்ளுதலும் வாடகைக்கெடுத்தலும் நிருமாணித்தலும் வேறுவகையில் பெறுதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கொன்றுடன் உசிதமான தெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

(ஆ) அதன் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை நிறைவேற்றுப் பேரவை பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய முறையில் முதலீடுசெய்தலும் காலத்துக்குக் காலம் அத்தகைய எவையேனும் முதலீடுகளை வேறுபடுத்தலும், மாற்றியிடுதலும், சட்டமுறையானதாதல் வேண்டும்;

(இ) ஏதேனும் பிணைப்பொறுப்பொன்றின்மேல் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக பணத்தைத் திரட்டுதலோ அல்லது கடனுகப் பெறுதலோ அத்துடன் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் தனிசை அல்லது கடப்பாட்டை பொருத்தமானதென எண்ணக் கூடியதான அத்தகைய முறையில் உறுதிப்படுத்துதல் அல்லது தீர்த்துக்கொள்ளுதல் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

(ஈ) அதன் நோக்கங்களுக்காக ஒப்பப்பணங்கள், மானியக்கொடைகள், நன்கொடைகள் அத்துடன் எவ்வகையினதானவையுமான கொடைகளைப் பரிந்து கேட்டலும், பெறுதலும் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

(உ) அதன் நோக்கங்களுக்குத் தேவைப்படும் எவையேனும் கட்டடங்களை நிருமாணித்தல், மாற்றஞ்செய்தல் அல்லது பேணுதல் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

ஆதனத்தைக் கொள்ளுதல், நிதிகளை முதலீடு செய்தல், கடன்களைத் திரட்டுதல் ஆகியவற்றுக் கான கூட்டுத் தாபனத்தின் தத்துவங்கள்.

(ஊ) ஏதேனும் தருமநோக்கங்களுக்காக பணம் வழங்குதல் அல்லது உத்தரவாதம் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

(எ) கூட்டுத்தாபனத்துக்காக அல்லது வேறேதேனும் தருமக் கழகம், நிறுவனம், சங்கம் அல்லது குழுவுக்காக நம்பிக்கைப்பொறுப்பாக கொண்டிருக்கப்பட்ட அல்லது சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கொண்டிருக்கப்படவுள்ள அல்லது சொந்தமாக வைத்திருக்கப்படவுள்ள ஏதேனும் நிலஞ்சார் அல்லது ஆள்சார் ஆதனங்களுடன் சம்பந்தப்பட்ட எவையேனும் சட்டமுறையான நம்பிக்கைப்பொறுப்புகளையும் நிபந்தனைகளையும் அத்துடன் வேறு தருமநம்பிக்கைப் பொறுப்புகளையும் கையேற்றல், ஏற்றுக்கொள்ளல், நிறைவேற்றுதல், புரிதல் அத்துடன் நிருவகித்தல் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

(ஏ) பல்கலைக்கழக மகளிர்க்கென தலைமையகமொன்றைத் தாபித்து நடாத்திவருதலும், கிளைகளையும் அத்துடன் ஆராய்ச்சி, பயிற்சி, சமூக அல்லது சேமநல நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களை இலங்கையின் எப்பாகத்திலும் தாபித்துப் பேணுதலும் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

(ஐ) அதனது அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும் சேவையிலிருந்து நீக்குதலும் அல்லது முடிவுறுத்தலும், கூட்டுத் தாபனத்தால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய சம்பளங்களையும், ஓய்வூதியங்களையும், பணிக் கொடைகளையும், படிகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

(ஒ) அதனது கடந்தகால அல்லது தற்போதைய அலுவலர்களுக்கு அல்லது சேவையாளர்களுக்கு அல்லது அத்தகைய ஆட்களின் உறவினர்களுக்கு அல்லது தங்கிவாழுநருக்கு பணிக்கொடைகளை, ஓய்வூதியங்களை, படிகளை அல்லது வேறு நலன்களை அளிப்பதற்கென ஏதேனும் நிதியத்தை அல்லது திட்டத்தைத் தாபித்தல் அல்லது அவற்றுக்கு உதவுதொகையளித்தல் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

(ஓ) அதனது குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக எவரேனும் ஆளுடன், கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி ஏதேனும் கம்பெனியுடன், சங்கத்துடன் அல்லது ஆட்கள் குழுவுடன் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துடன் அல்லது உள்ளூர் அதிகாரசபையுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துகொள்ளுதல் சட்டமுறையானதாதல் வேண்டும் ; அத்துடன்

(ஔ) அதனது குறிக்கோள்களைத் தகுந்தவாறும் பயனுறவும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவை அல்லது உசிதமானவையான வேறெல்லாக் காரியங்களையும் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

12. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நிறைவேற்றுப் பேரவையின் தீர்மானமொன்றன் அதிகாரத்தின்கீழும் நிறைவேற்றுப்பேரவையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலும் அன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமூகமளித்தமைக்கு அடையாளமாக சாதனத்தில் தங்கள் பெயரை ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒப்பம் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பு வரையறை.

13. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளை அல்லது பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரிடமிருந்து போமதியாக இருக்கக்கூடிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத் தொகையை விஞ்சிய ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

14. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாத் தனிசுகளையும் பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையும் ஆன வேறேதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால், கூட்டுத்தாபனம் கலைக்கப்படும்போது அல்லது கலைக்கப்படுவதற்கு உடன் முன்னராகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஆதனம் அல்லது அதனது ஏதேனும் பாகம் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கக் கையுதிர்க்கப்படவியலாவிடின், அத்தகைய ஆதனம் அல்லது பாகம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படவேண்டிய வேறு தருமக் குறிக்கோள் தொடர்பில் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

15. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.